

லயன்
காமிக்ஸ்
85
யுத்தம்!
ரூ 3/-

# ஹாட் - லைன்!

வாசக நண்பர்களே,

**"இரத்தமில்லா யுத்தம்"** ஒரு அரசியல் க்ரைம் த்ரில்லர்! அமெரிக்க ஜனாதிபதிப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நேர்மையாளருக்கு ஏற்படும் சிக்கல்களை சுவாரஸ்யமானதொரு கதையாக வெளியிட்டிருக்கிறோம். இது முழுக்க முழுக்க கற்பனையே!

அடுத்த இதழாக **"லயன் தீபாவளி மலர்"** ரூ. 10/- விலையில் வரயிருக்கிறது! உங்கள் அபிமான **டெக்ஸ் வில்லர்** குழுவின் முழு நீளக் கதை **"கழுகு வேட்டை"** யாக மலர்கிறது! ப்ளஸ் ஒரு மினி கதையும் உண்டு!

தொடர்ந்த இதழில் நீண்ட நாள் காணாமல் **"இரும்பு மனிதன் ஆர்ச்சி"**




லயன்
காமிக்ஸ்
F.B.I. ஏஜெண்ட் காரிகன் தோன்று
இரத்தமில்லா யுத்தம்!
விலை ரூ. 3/-


ரிப் கிர்பி & டெஸ்மாண்ட் தோன்றும்
கானகக் கோட்டை!



...ளவுத் துறை தலைமையகம்..
அரசியல்வாதி ஒருவருக்கு பாது காப்பு தரும் பணியை காரிகனுக்கு நீங்கள் கொடுக்க நினைப்பது அவனுக்கு ஓய்வு கொடுக்கவா?
ஆமாம்...! வரிசை யாக பல கடும் பணிகளை செய்து முடித்திருக்கிறான்... அவனாக ஓய்வு கோரமாட்டான்... சுபாவம் அப்படி..
உப்புச் சப்பில்லாத பணி என்று முணுமுணுப்பானே
பணியில் சுவாரஸ்யத்தை புகுத்த அந்த வேட்பாளருக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் வருவதாக கதை கட்டிவிடலாம்!
கதை கட்ட அவசியமே இருக்கவில்லை...
ஓமருக்கு மக்க ளிடையே செல்வாக்கு இருக்கிறது...! கூடுதலாக கொஞ்சம் பப்ளிஸிடி கிடைத்தால் எங்கோ போகலாம்!..
அச்சுறுத்தல்' அந்த பப்ளிஸிடியை தந்து விடும்... பாஸ்!
புயல் உருவாகிக் கொண்டிருந்தது...
சீஃப்... வாங்க.. வாங்க!
ம்ம்..! க்ராய் விஷயத் திலே சக்கைப் போடு போட்டுவிட்டாய் போலிருக்கிறது!
சரி.. உனக்கு ஒரு புது பணி காத்துக் கொண்டிருக்கிறது.
ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கும் ஒரு வேட்பாளருக்கு பாதுகாப்புத் தர வேண்டும்.... பெயர்... ஓ..ம..ர். லாங்....
...ரீ..ச்..த்!
அப்படிப் பார்க்காதே காரிகன்... அந்த ஆளுக்கு மிரட்டல் கடிதங்கள் வருகிறது.. அதுதான்!



நிஜமான மிரட்டல் கடிதம் உருவாகி வந்தது உளவுத் துறைக்குத் தெரியாது!
மிஸ்டர் ஜிண்டர்.. இது எப்படி இருக்கு?
அருமை..! மிட் - டவுனில் தபாலில் சேர்த்துவிடு!
உள்ளூர் பத்திரிக்கை ஆசாமியா.. ? நீ ஒரு ஆள்தானா இங்கே?
பின்னே? சும்மா ஒப்புக்கு வந்தேன்! டி.வி., பிரபல தினசரிகள்லாம் வெற்றி ஈட்டும் வேட்பாளர் களின் பின்னால் திரிகிறார்கள்!
ஓமருக்கு மக்களை ஈர்க்கும் கவர்ச்சி, பேச்சு சாதுரியம் எல்லாம் இருக்கிறது. ஆனாலும் - ஹூம்... இந்த அரசியலே இப்படித்தான்!
பத்திரிக்கையில் பப்ளிஸிடி... கொஞ்சம் பரபரப்பு... மக்களின் கவனத்தை ஈர்க்கிற மாதிரி -
அப்பறம்.. மிகச் சுலபமாக ஜெயித்து விடுவார் ஓமர்..
ஓமரின் பிரச்சார ஊர்வலத்தில் காரிகன் கலந்து கொண்டார்!
நன்றாக பேசுகிறார்... ஆனால் - பிரிந்து வந்த துண்டுக் கட்சி தானே.. குறுகிய கால பிர பல்யம்....
ப்பளிஸிடி வேறு போதாது... இவரை ஒரு பொருட்டாக எண்ணி மிரட்டுகிற முட்டாள் எவனோ?
இல்லாததை எல்லாம் கற்பனை செய்து என்னிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டார் சீஃப்.. தேர்தல் நடந்து முடிகிற வரை .கொட்டாவி விட்டுக் கொண்டே பொழுதை தள்ள..
ELECT OMAR LONGREACH



..வேண்டியதுதான்?
நானொரு டிடக்டிவ்! காரிகன் என் பெயர்.. மிஸ்டர் லாங்ரீச் என்னை வரச் சொன்னார்.
504வது அறை... ஸார்!
மிஸ்டர் காரிகன்.. என்னடா முகத்தில் அறைகிற மாதிரி சொல்கிறாளே என்று நினைக்க வேண்டாம்.. போய் விடுங்கள்...
அப்பாவுக்கு ஏற்கனவே பண முடை...! நீங்கள் வேறா..? - தாங்க மாட்டார்!
குட் - பை!
மேடம்
லாரல்!
என்னை உளவுத் துறையிலிருந்து அனுப்பியிருக் கிறார்கள். உங்களுக்கு
செலவு கிடையாது... எனவே, ப்ளீஸ்..
ஓகோ..! அலட்டல் இல்லாத வேலை... என்று வந்துவிட்டீர் களாக்கும்...! ஆனால் தொல்லை - எங்களுக்கு அல்லவா?
உங்கள் வழியில் குறுக்கிட மாட்டேன்- நம்புங்கள்.



ஹும்..! ஏற்கனவே ஏகப்பட்ட தொல்லைகள்... இப்போது நீங்கள் வேறு!
உங்கள் அப்பாவை எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது!
உங்கள் உதவி எங்களுக்கு தேவை இல்லை மிஸ்டர் காரி.. ஓ -
மிஸ் லாரல்.. என்ன ஆயிற்று?
ஆபத்து...! இதை படித்துப் பாருங்களேன்!
லாகஸ்ரீத் ஓடிப்போ! இல்லையேல் பரலோகப் பயணம் தான்!
இதற்கு முன் இப்படி அச்சுறுத்தல் வந்ததுண்டா?
இல்லை...! இதுதான் முதல் தடவை
நேற்றுத்தான் தபாலில் சேர்க்கப் பட்டிருக் கிறது!
அதனால்..?


எங்கள் பாஸுக்கு நகைச் சுவை உணர்வு கொஞ்சம் ஜாஸ்தி! என் பணியை சுவாரஸ்ய மாக்கும் எண்ணத்தில் இந்தக் கடிதத்தைத் தட்டி விட்டி ருக்கிறார் என்று நினைக்கிறேன்!
இந்தக் கடிதம் சும்மா பூச்சாண்டி காட்ட அனுப்பப் பட்டிருக் கிறது என்றா சொல்கிறீர்கள்!
தீர்மானமாக இப்போ தைக்கு சொல்ல முடிய வில்லை!
ELECT
OMAD
நான் வீணாக கலவரப் பட்டுவிட்டேன். அப்பாவுக்கு எதிரி என்று எவருமே கிடையாது.
வாழ்க்கையில் முன்னேறி வரும் எவரும் அப்படி சொல்ல முடியாது!
அப்படியில்லை..!
உன் கணிப்பு தவறு என்று நிரூபித்து விட்டதே இந்தக் கடி தம்!
காரிகன்... பணி சுலபமானது இல்லை என்று நாடகமாடவா இந்த கடிதத்தை ஏற்பாடு செய்தீர்கள்?
கடவுளே..! சரியான சந்தேகப் பிராணியாக இருக்கிறாயே நீ!
இது தமாஷ் சமாச்சாரம் இல்லை பெண்ணே! நிஜம் என்ன என்று ஆராயாமல் விட்டால் ஆபத்தாகிவிடலாம்!
செய்யுங்கள் - !


அப்பாவுக்கு ஏதாவது விபரீதமாக நேர்ந்து விட்டால்..?
..ஓ.கே. உங்கள் உதவி எங்களுக்கு தேவைதான்!
அதைத் தொடர்ந்து -
லாரல்... உங்களுடைய ஊழியர்கள் அனைவரையும் நான் சந்திக்க வேண்டும்!
மை காட்..! நீங்கள் அவர்களை சந்தேகிக்கிறீர்களா - இந்த கடிதத்தை எழுதியிருப்பார்கள் என்று?
இந்த கடிதத்தை பாருங்கள் டாடி..!
லாரல்.. ஏன் அவர்மீது எரிந்து விழுகிறாய்?
அப்புறம் - நடந்ததை தந்தையிடம் விவரித்தாள் லாரல்..
என் ஊழியர்கள் ஏன் இந்தக் கடிதத்தை எழுத வேண்டும்..?
பரபரப்பூட்டத்தான்!
CTOMAR LONG
அப்படியானால் வீணாக அலட்டிக் கொள்ள தேவை இல்லைதானே?
இல்லை.. ஆராய்ந்து உண்மையை தெரிந்து கொண்டு விடுவது நல்லது!
முரட்டுத் தனமாக நடந்து கொண்டு விட்டதற்கு ஸாரி மிஸ்டர் காரிகன். நான் ஏதாவது ஒத்தாசை...
ஓ.. ஷ்யூர்! உன் உதவி எனக்குத் தேவைதான்!


ஆனால் இதுபற்றி பத்திரிக்கைகளுக்கு எதுவும் சொல்ல வேண்டாமில்லையா?
ஸார்... இந்த மிரட்டல் விவகாரம் உங்களுக்கு நல்ல பப்ளிஸிட்டியை தரும் ஸார்..
தம்பி..! நான் எப்படியும் வெற்றி பெறப் போவதில்லை. எனவே, நாகுக்காக 'அப்படியெல்லாம் தந்திரம் பண்ணி வெற்றி பெற இஷ்டமில்லை எனக்கு' என்று சொல்கிறேன்!
நிஜமாகத்தான் சொல்கிறாரா..! இல்லை - நாடகம் ஆடுகிறாரா?
அந்த மிரட்டல் கடிதம் பற்றி ஒரு பத்திரிக்கையிலும் வர வில்லையே... ஏன்?
அந்த மாதிரியான மிரட்டல் வருகிற அளவுக்குத் தான் பெரிய மனிதன் இல்லை என்று அந்தக் கிழவன் அலட்சியமாக விட்டிருக்கலாம்.
நாம்தான் அநாம தேயமாக போனில் பேப்பருக்கு சொல்லி வைப்போமே!
அவரை எப்படி யாவது பெரிய மனுஷன் ஆக்க வேண்டும்.
ஹே..! கேட்டீர்களா - கொலை மிரட்டல் வந்திருக்கிறதாம் ஓமருக்கு!
நல்ல தமாஷ்.. யாரவன் ரீல் விடுகிறது?
பொய்யோ.. நிஜமோ.. எதற்கும் ஒரு ஆளை அனுப்புவோம்



.ம்ம்.. சூடு பிடித்து விட்டது!
வாங்க மிஸ்டர் காரிகன்... போய் எங்கள் ஊழியர்களை சந்திப்போம்!
பிரிக்ஸ் இதை விரும்ப மாட்டான்...
காரிகனை அவன் வெறுக்கும் பட்சத்தில் சிக்கலாகி விடலாம்!
இவர்தான் எப்படி சமாளிக்கிறார் என்று பார்ப்போமே!
அவனை எச்சரிக்க வேண்டுமா?
மிரட்டல் நிஜமாக இருந்துவிட்டால்...? வேண்டாம்!
காரிகன்.. இவர்- பிரிக்ஸ்..! என் தந்தையின்...
மெய்க்காப்பாளன்..! உனக்கு இங்கே வேலை இல்லை. நீயாக ஓடிப் போய் விடு - இல்லையேல்..
...உன்னை நான் துரத்தியடிப்பேன்!
கொதிப்படையாதே பிரிக்ஸ்.. உளவுத் துறை என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறது!


என்ன..?
உளவுத்துறையா..? நாசமாகப் போக..! நீ இங்கே வாலை சுற்றி வந்து கொண்டிருந் தால் பொல்லாத வனாகி விடுவேன்!
உன் காதலியை கவர்ந்து போக நான் இங்கே வரவில்லை அப்பனே!
காதலியா... நாகு... கோமாளித்தனத்தில் பிரிக்ஸையும் மிஞ்சி விட்டீர்களே.
உங்கள் மர மண்டை களில் ஒரு விஷயத்தை ஏற்றிக் கொள்ளுங்கள் நாம் நடத்துவது தேர்தல் பிரச்சாரக் குழு! டிராமா கம்பெனி அல்ல!
இரண்டு பேரும் இப்போது கை குலுக்கிக் கொண்டு சேர்ந்து பணியாற்றுங்கள்.. இல்லையேல். இடத்தை காலி செய்துவிட்டு ஓடிப் போய்விடுங்கள்.
இந்தப் போக்கிரி யோடு தானே.. ஓ கை குலுக்கினால் போயிற்று!
முதலில் இதை வாங்கிக் கொள்..
அலிச்சை யானது!
செயல் வேகம்...


தொப்
நிறுத்தித் தொலை யுங்கள் உங்களுடைய அடாவடித்தனத்தை!
ஆனால்.. நான் -
ஆனால்.. வந்து..
லாரல் சொல்வது சரிதான்.. கௌரமான முறையில் பிரச்சாரம் நடந்து கொண்டிருக் கையில் இடையில் நீங்கள் இப்படி குள றுபடி பண்ணினால் ஒத்து வராது..
மேலே ஒரு வார்த்தை பேசினாலும் வெளி யேற்றப்படுவீர்கள் இங்கிருந்து..
ஆனால்...
அந்த மிரட்டல் நிஜமாக இருந்தால் கையாலாகாத பிரிக்ஸின் பொறுப்பில் இவர்களை விட்டுச் செல்வது சரியில்லை. எனவே...
ஸாரி மேடம்.. இனி ஒழுங்காக நடந்து கொள்வேன்.
சரி.. நான் என்ன செய்ய வேண்டும் - சொல்லித் தொலை!
நீ உன் வழியிலேயே போ.. நான் திரை மறைவில் நடக்க வேண்டியதை கவ னித்துக் கொள்கிறேன்.
அப்பாவின் பிரச்சார குழுவினர் இம்மாதிரி மட்ட ரகமான சூழ்ச்சி களில் இறங்க மாட்டார்கள்... எனவே, நீங்கள் சாதிக்கப் போவது எதுவு மில்லை.
பிரச்சார குழுவினரின் பட்டியலை தயாரித்து உளவுத்துறை கம்ப்யூட்டரில் அபிப் பிராயம் கேட்டுவிட்டு அப்புறம் சொல்கி றேன்.



வேறொரிடத்தில்..
மிரட்டல் கடிதம் பலிக்கவில்லையே!
பேப்பர்காரர்களும் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை..
ஓமர் தேர்தலில் வெற்றி பெற வேண்டு மானால் எப்படி யாவது பப்ளிஸிடியை தூண்ட வேண்டும்.
எப்படி..?
ம்ம்.. ஓமருக்கு விபரீத மாக ஏதாவது சம்பவிக்க வேண்டும்.. அதுவும் உடனே..
அந்த யுக்தி பலிக் குமேயானால்... ஓமர்.. அதாவது நாம் ஆதரிக்கும் வேட்பாளர் பிரஸிடெண்ட் ஆகி விடுவார்.
அடிமட்ட சுயநல கும்பல் ஒன்று ஓமருக்கு இரகசியமாக உதவி செய்து வந்தது.
நம்முடைய ஆள் - பிரஸிடெண்ட்..! ஆகா..!
அப்புறம் இந்த நாட்டில் நாம் வைத்தது தான் சட்டம்!
சரி.. கனவு காணாதே..! விஷயத் திற்கு வருவோம்.
என்ன செய்யலாம் சொல்லுங்கள்..!


ஓமருக்கு விபரீதமாக ஏதாவது சம்பவிக்க வேண்டும்.. ம்ம்..
ஹே.. பாஸ்.. நிஜமாகவே அவரை காயப்படுத்தப் போகிறோமா?
அவரைத்தான் என்றில்லை..! அவருக்கு வேண்டியவர்களில் யாரையாவது - போதும்!
சமயம் வரும்போது அதை தீர்மானிப்போம்!
ஆனால்... யாரை - ?
அநத் விபரீதத்தின் பின்னணியில் இருப்பது நாம் என்று தெரிந்து விட்டால்...?
வெளியே தெரிய வாய்ப்பே இல்லை.
உளவுத் துறை கம்ப்யூட்டர் நம்மை காட்டிக் கொடுத்து விடும் அபாயமுண்டு...
அந்தப் பிரச்னையை என்னிடம் விட்டு விட்டு நிம்மதியாக இரு..!
எப்படி சமாளிப்பீர்கள்... பாஸ்?
கம்ப்யூட்டர்கள் அற்புதமானவைதான். ஆனால் மனிதனை விட வெகு சுலபமாக உதிர்ந்துவிடக் கூடியவை!
நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்!



ஓமரின் இருப்பிடத்தில் -
எங்கள் ஊழியர்களில் நெறிகெட்ட எவரையும் நீங்கள் காண முடியாது காரிகன்!
எங்கள் கம்ப்யூட்டர் அதை ஒத்துக் கொள்ளட்டும் - ஏற்றுக் கொள்கிறேன்.
டாம்? காரிகன் பேசுகிறேன்.. பெயர் பட்டியல் ஒன்றை உனக்கு அவசர தபாலில் அனுப்பி வைத்திருக்கிறேன்.. நீயே அதை கம்ப்யூட்டரில் கொடுத்து சோதித்து முடிவை உடனே தெரிவி.
ஓ.கே. காரிகன்!
டாம்... சத்தியமாகச் சொல்... இந்த மிரட்டல் விவகாரம் உன் விஷமம் இல்லையே?
இல்லை.. காரிகன்..! யாருடைய யுக்தியோ..? அல்லது பித்துக்குளி எவனாவது செய்த கிறுக்குத்தனமோ!
H.O.
டாம்.. நாம் அலட்சியமாக இருந்து விடலாகாது... கம்ப்யூட்டரின் தீர்ப்பை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.
அதற்குள் -
மிஸ்டர் ஜிண்டர்? பிரிக்ஸ் பேசுகிறேன்.. கேள் -
பட்டியலில் உன் பெயர் இருந்தால் உடனடியாக ஏதாவது...
...எச்சரிக்கைக்கு நன்றி... ஆனால் விசாரப்பட ஏதுமில்லை.


எல்லோருமே நல்லவர்கள் என்று கம்ப்யூட்டர் சொல்லி விட்டால் அப்புறம் என்ன செய்வீர்கள்?
என்னுடைய பணி கடுமையானதாகி விடும்.
பட்டியலில் என் தாய் வழி சகோதரனின் பெயரை சேர்க்க மறந்து விட்டேன்..
ஏன்...? ஏன் விட்டு விட் டாய்?
அவன் வெளியூரில் படிக்கிறான் -
அப்பாவுக்கு தீங்கு செய்ய ஒரு போதும் எண்ணக் கூடியவனல்ல!
அதை நீயோ நானோ தீர்மானிக்க முடியாது!
சந்தேகப் பிசாசு!
OMAR
LONGREACH
Raul Vlasto
University
ஆல்ரைட்.. இந் தாருங்கள் அவனுடைய முகவரி.. கல்லூரியில் சேர்ந்த புதிதில் ராவுலுக்கு
பிரச்னைகள் ஏற்பட்டதென்னவோ உண்மைதான்.. ஆனால் அதன் பின் அவன் தப்பாக எதையும் செய்ய வில்லை!
இந்த விபரங்கள் உங்கள் ஃபைலில் இருக்கலாம்.. ஆனால் அவன் ரொம்பவும் மாறிவிட்டான்.
அவன் விஷயத்தில் நீங்கள் நேரத்தை வீணடிக்கத் தேவையிராது!
பார்ப்போம்!


பின்னால் ஓமரை நெருக்க வேண்டிய அவசியம் ஏற் பட்டால் ஜிண்டருக்கு இது பயன்படலாம்!
உன் பட்டியலை இப்போதுதான் சோதிக்க ஆரம்பித்திருக்கிறேன் காரிகன்
நான் அவசரப்படுத்த வில்லை! இன்னொரு பெயரையும் சேர்க்க வேண்டும் - அதற் காகத்தான் அழைத்தேன்!
அச்சுறுத்தல் கடிதம் எந்த விளைவையும் ஏற்படுத்த வில்லையே?
அடுத்த கட்ட நட வடிக்கை நிச்சயமாக நல்ல விளைவை ஏற்படுத்தும்.. பார்!
சொல்லுங்கள்...!
ஓமர் மீது முட்டை களை எறிய ஏற்பாடு செய் - போ..!
கைக்கூலிகள் பிடி பட்டு நம்மை காட்டிக் கொடுத்துவிட்டால்?
அந்த அசம்பாவிதம் நடக்காமல் தடுக்க உனக்கு முடிய
வில்லை என்றால் கண்காணாமல் ஓடிப் போய்விடு!
மக்களுக்கு ஓமர் மீது அபிமானம் நிறைய உண்டு. ஆனாலும் தான் ஜெயிக்க
முடியாது என்ற உண்மை அவருக்கு நன்றாகவே தெரியும்..
YOU CAN TRUST


நன்றாக திட்டமிடப் பட்ட 'போலி (மிரட்டல்' ஒருவேளை தேர்தல் முடிவை மாற்றி அமைத்துவிடலாம்!
.. முட்டைகளை எறிவதால் அதிக வோட்டுக்களை பெற்று விட முடியாது பாஸ்.
இது ஒரு தொடக்கம் தான்.. முடிவில் கொலைகள் நடக்கும்!
டாடி.. எனக்கு பயமாக இருக்கிறது. பேசாமல் போட்டியி லிருந்து விலகிக் கொள்ளுங்களேன்!
இந்தக் கட்டத்திலா? - சாத்தியமே இல்லை லாரல்!
ஏதாவது, விபரீதம் நிகழ்ந்துவிட்டால்...?
பயப்படாதே! காரிகன் நினைப்பது போல் எனக்கு ஓட்டு சேகரிக்க நம் நண்பர்கள் செய்த சூழ்ச்சிதான் இது என்று நானும் நம்புகிறேன்.
OMAR
ஓமரின் பிரச்சாரப் பயணம் தொடர்ந்தது!
ELECT OMAR!
ஓ..! பிரைவேட் ஜெட்..! ஏகப்பட்ட செலவாகுமே!
நேர்மையாளர்கள் நேர்மையான வழியில் சம்பாதித்த பணம் செலவிடப்படுகிறது.. காரிகன்
வெற்றி வாய்ப் பில்லாத நபரை நம்பி இவ்வளவு பெரிய செலவை ஏற்கும் நபர் யார்? - ஏதற்காக?
செல்வாக்கு மோகம் தான் காரணம் காரிகன்



யார் என்று தெரிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவாய்
ஆச்சரியமா? காரிகன் சிரித்தார்.
ஓ! உங்களுக்கு... இவரை அறிமுகம் செய்து வைக்கிறேன் காரிகன்! இவர் ஆஸ்டின் பத்திரிக்கை நிருபர்!
பணி நிமித்தம் வந்திருக்கிறேன் நான்.. வெற்றி வாய்ப் பில்லாத வேட்பாளரின் பின் பிரபல பத்திரிக்கை நிருபர் அலைவது ஏனோ?
மிரட்டல் வந்திருப் பதாக கேள்வி..! நிஜமானால் ஓமர் ஒரே நாளில் பிரபலமாகி விடுவாரில்லையா?
மிரட்டல் விவகாரம் பப்ளிஸிடிக்காக நாங்களாக கிளப்பி விட்ட புரளி என்று சந்தேகிக்கிறார் காரிகன்!
அப்படியா? அதுதான் நிஜமா?
இல்லை...!
நிச்சயமாக இல்லை!
இது உங்களுடைய ஆதரவாளர்களின் விஷமம் இல்லை
என்று உறுதியாக உங்களால் சொல்ல முடியுமா?
அப்படித் தான் நினைக் கிறேன்!
நாம் தரையிறங்கும் போது கம்ப்யூட்டரின் தீர்ப்பு அங்கே தயாராக காத்துக் கொண்டிருக்கும்.



மிட் வெஸ்ட்ஸிடி.. அடுத்து அங்கேதான் ஓமர் பிரச்சாரம் செய்யப் போகிறார்.
ELECT OMAR
காரிகன்.. டாம் இதை உங்களிடம் உடனடி யாக ஒப்படைக்கச் சொன்னார்!
நன்றி..!
எங்கள் ஆதரவாளர் களைப் பற்றி கம்ப்யூட்டர் என்ன கருத்து தெரிவித்திருக்கிறது?
எந்தப் புகாரும் இல்லை!
சொன்னேன் இல்லையா?
ஹ்ம்ம்... என்னவோ உதைக் கிறதே! எதற்கும் நான் இந்தப் பட்டியலில் உள்ளவர்களை யெல்லாம் சந்திப்பது நல்லது என்று தோன்றுகிறது!
என்ன பிதற்றல் இது? உங்களுடைய கம்ப்யூட் டரையே நீங்கள் நம்பவில்லையா? சரியான சந்தேகப் பிராணி!
கொதிப்படையாதே லாரல்! அவர் களுடைய தொழிலில் 'யாரையும் நம்பாதே' என்பது அடிப்படைப் பாடம்..! காரிகனும் விதிவிலக்கல்ல!
ஓ.கே.! அப்பாவின் மேடைப் பேச்சு முடிந்ததும் ஆதரவாளர் களுக்கு ஒரு விருந்து நடக்க விருக்கிறது!



அங்கே குதர்க்கமாக ஏதாவது கேட்டு எல்லோருடைய மனத்தையும் நீங்கள் புண்படுத்தலாம்.
ஆனாலும் யாரும் கோபித்து கொள்ள மாட்டார்கள் - காரணம்.. அவர்கள் அத்தனை பேரும் தங்கமானவர்கள்!
அதே சமயம் முட்டை கோஷ்டி தயாராகியது
சொன்னதெல்லாம் புரிந்த தா.. கச்சி தமாக காரியத்தை செய்து முடிக்க வேண்டும்.
சரி - பணம்..?
ஹாய்ய்..! இவ்வளவா..? இந்தத் தொகைக்கு முட்டை களைத் தான் என்றில்லை வேறு எதை வேண்டுமானாலும் வீசத் தயார்
இம்முறை.. முட்டைகள் மட்டுமே போதும்!
ஓ.. என்னருமை வாக்காளப் பெருமக்களே-
ஏய்ய்.. கிழவா! நிறுத்து உன் பேச்சை -
ஓடிப் போய்விடு... இல்லையேல், பரலோக பயணம்தான்
ஹே... ஓமர்.. இந்தா- என் நினைவுப் பரிசு..!


ஓடிப்போ.. இல்லை யேல்.. உனக்கு சமாதி இங்கேதான்
ஹாய்ய்.... ஹாய்ய்....
பேப்பே.. ப்ப் . பேப்பே..!
ஓ.. டாடி..!
சத்! சத்!
பளார்
டாடி..!
டொப்
நீசத்தனமான கோழைகள்
வாருங்கள் போகலாம்.. சண்டாளர்கள் வேறு எதையாவது வீசித் தொலைக்கலாம்!



அவள்களை பிடித்து -
ஹா...ஹா.. ஜிண்டரின் சூழ்ச்சி படு சூப்பர்!
இங்கேயே இருங்கள் - இதோ வந்துவிட்டேன்.
ஹே.. ஓமர்.. பிடி அவனை
ஹய்ய்... ஹய்ய்...
ஏய்.. மொள்ள மாறிகளா.. ஓமரை என்னடா பண்றீங்க?
பிடியுங்கள்.
அவருக்கா இந்த அநியாயம்?
பசங்களா.. போதும். ஓடிப் போயிடுங்க..
அடடே... ஜனங்கள் ஜிண்டரின் கூலிகள் சிலரை பிடித்துக் கொண்டார்களே! - ஆபத்தாயிற்றே!
விஷமிகள் தப்பி யோடுகிறார்கள்!
இரண்டு பேரை பிடித்துவிட்டோம்!
விடாதே..பிடி!


ஒருவன் அகப் பட்டாலும் போதும்! உண்மையை வரவழைத்து விடலாம்!
ஓமரின் செக்யூரிட்டி நான்.. அவர்களை என்னிடம் விடுங்கள்.
குறுக்கே நான் விழுகிறேன். நைஸாக கழற்றிக் கொண்டு ஓடிப்போய் விடுங்கள்.
நான் ஓமரின் செக்யூரிட்டி..
ம்ம்.. ஓடிப் போங்கள்!
CT OMAR
நன்றி..!
நில்லுடா..! உன்னை போக விடமாட்டேன்.
படுபாவி காரிகன்.. ஓர் இடைஞ்சல்!
அடச்சே... மறுபடியும் கால் இடறிவிட்டது!
அந்த ஆள் நாம் தப்பி வெளியேற உதவி பண்ணினார்
எல்லாம் பணம் பண்ற வேலை!



கெடுத்தாயேடா.. பாவி!
அந்த முரடனை எட்டிப் பிடிக்கிறேன் பேர்வழின்னு என்னை இடறிவிட்டு விட்டாய்.. நிஜமாகவே நீ ஓமருக்கு உதவி பண்ணத்தான் வந்தாயா.. இல்லை -
விஷமிகள் எல்லோரும் தப்பிச் சென்றுவிட்டனர்.
ஒருவனை பிடித்தேன்.. இவன் குறுக்கே வந்து குளறுபடி பண்ணி விட்டான்.
நானா..?
நிறுத்துங்கள் உங்கள் சண்டையை.. உடனடியாக கழுவி சுத்தம் பண்ண எங்கேயாவது எங்களை அழைத்துப் போங்கள்.
ஓமரும், அவருடைய மகளும் சேர்ந்து அரங்கேற்றிய நாடகமாக இருக்குமோ?
அப்படி இருந்து விட்டால் நான் அலட்டிக்கொள்ள வேண்டாமே! ஆனால்-
"ஆனால்...?"
வேண்டாத விஷமிகளின் திட்ட மிட்ட சூழ்ச்சியோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது!


ஓமரை காயப்படுத் துவதால் யாருக்கு என்ன லாபம்?
ஓமரை - சரிதான்.. ஆனால்
நீ என்ன சொல்ல வருகிறாய்?
சுயநல விஷமிகளின் உள்நோக்கம் உங்களுக்கும் தெரியாததல்ல..
ஆனால் வரம்பு மீற மாட்டார்கள்..
இல்லை. இது கொலைகளில்தான் போய் முடியும்!
உங்கள் சூழ்ச்சி பலித் துவிட்டது.. பாஸ்!
மூட்டைகளை வைத்து இவ்வளவு சாதிக்க முடிந்தது என்றால் நம் இலட்சியத்தில் சீக்கிரமே வெற்றி ஈட்டிவிடலாம்.
பொது மக்கள் ஓமரை காப்பாற்றினர்!
ஓமரின் வெற்றி வாய்ப்பு அதிக ரிப்பு- கம்ப்யூட்டர்
நம் சூழ்ச்சி அம்பலமாகி ஓமருக்கும் தெரிந்துவிட்டால்..
நியாயமான பயம்தான் உன்னுடையது..! பார்ட்டியில் அவரிடமே கேட்டுவிடுகிறேன்!


பார்ட்டியின் போது -
அந்தப் பயல் பிரிக்ஸை அறவே பிடிக்கவில்லை எனக்கு.
ஆனால் வருகிற விருந்தாளிகளை நன்றாகத்தான் குல்லா போடுகிறான்!
மிஸ்டர் ஜிண்டர்.. பாஸ்.. உங்க ஆட்களை காரிகன் மடக்கி விட்டான். நான்தான் குறுக்கே விழுந்து தப்புவித்தேன்.
பிரிக்ஸ்..! உனக்கு கொஞ்சமாவது மூளை இருக்கிறதா.. போடா..! தொலைந்து போடா..! என் கண் முன்னே நில்லாதே.
என்ன அங்கே சப்தம்..? ஏன் அவன் மேலே அப்படிப் பாய்கிறான்!
வாங்க காரிகன்.. எல்லோரையும் அறிமுகப் படுத்துகிறேன்.
எல்லோருமே நல்லவர்கள்தான் என்று
கம்ப்யூட்டர் சொன்னது சரிதான் என்று புரியும்!
ஓமரின் பிரச்சாரக் குழு உறுப்பினர்களை காரிகன் சந்தித்தார்.



லாரல்..! எல்லோருமே யோக்கிய மானவர்களாகத்தான் தென்படுகிறார்கள்!
அதோ.. மிஸ்டர் ஜிண்டர்... பிரச்சாரக் குழுவின் தலைவர்.
இன்று நடந்த அசம்பாவிதம் இயற்கை யானது என்றால் அது கலக்கத்தை ஏற்படுத்துகிறது.. மாறாக, பப்ளிஸிடிக்
காக ஜோடனை செய்யப்பட்டது என்றால் பத்திரிக்கையாளர்கள் உண்மையை வெளிக் கொணர்ந்து நம்மை வாட்டி எடுத்து விடுவார்கள்.
நம் ஆட்களின் வேலையாக இராது.. ஜிண்டர்! உளவுத் துறை கூட
அனைவரையும் நல்லவர்கள் என்றே கணித்திருக் கிறது...!
நம்மில் ஒருவர் செய்த தந்திரம்தான் என்று காரிகன் இன்னமும் நம்புகிறார்?
அர்த்தமற்ற பேச்சு..!
அரசியல் பேச நான் இங்கே வரவில்லை மிஸ்டர் ஜிண்டர். ஓமர், லாரல் இருவரின் பாதுகாப்பை உறுதி செய்வதே என் குறிக்கோள்.
அந்நிகழ்ச்சியால் விளைந்த லாபத்தை பார்த்தீர்களல்லவா..? எதிரி இந்த தப்பை செய்யமாட்டான்!
சந்தேகக் கண்ணோடு பார்க்கிறீர்கள்..! மக்களின் பேராதரவுக்கு ஓமரின் பிர பல்யம் தான் காரணம்!
ஓ.கே.? அப்படி என்ன ஆபத்து, யாரிடமிருந்து வந்தது என்று நினைக் கிறீர்கள்?
பதில் சொல்லுங்கள்... காரிகன்!
அடுத்து ஒரு பெரிய கூட்டத்தில் உன் தந்தை பேசவிருக் கிறார் அல்லவா? அப்போது சொல்கிறேன் என் பதிலை!


இப்படி ஒரு சந்தேகப் பிராணியை அருகில் வைத்துக் கொண்டு எப்படித்தான் நிம்மதியாக இருக்கிறீர்களோ?
அந்த மிரட்டல் கடிதம் எங்கிருந்து போஸ்ட் செய்யப்பட்டது என்று கண்டுபிடித்தீர்களா?
கண்டு பிடிக்க முடிய வில்லை..! டி.வி., சினிமாக்களில் எப்படி தடயமின்றி ஒரு அனுமதேய கடிதத்தை போஸ்ட் செய்வது என்ற சூட்சமம் சொல் லித்தரப்படுகிறதே!
முயற்சி ஒரேயடியாக கைவிடப்பட்டு விட்டதா?
இல்லை.. வேறு சில யுக்திகளை கையாளப் போகிறேன்.
வாய்ச் சவடாலுக்கு குறைச்சலில்லை!
எப்படியும் தொலை கிறார்கள் என்று மூட்டையை கட்டிக் கொண்டு கிளம்பி விடுகிறதுதானே?
மனது கேட்கவில்லை ஸார்.. ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டால் பிறகு வாழ்நாள் முழுக்க உறுத்திக் கொண்டேயிருக்கும்.
சரி.. காரிகன்! ஓமரின் நலனில் எனக்கும் அக்கரை உண்டு. உதவி தேவைப்பட்டால் எனக்கும் தகவல் கொடு!
தாங்க்ஸ் மிஸ்டர் ஆஸ்டின்! அது சரி.. மிரட்டல் விவகாரம் உங்களுக்கு எப்படி தெரிய வந்தது?
PRESIDE



வழக்கம் போல் ஓர் அனுமதேய போன் கால்தான்! அதை பதிவு செய்து வைத்திருக்கிறோம்!
ஆண் குரலா? ஓமரின் குரலை கேட்டீர் களல்லவா?
ஸாரி.. போனை நான் எடுக்கவில்லை!
அப்படியா?
அவர்களிடமே கேட்டுவிடலாம்!
அந்தப் பெண் உன்னை கடித்துக் குதறாமல் விடமாட்டாள்.
என்ன? நாங்களா?
எங்களை இழிவு படுத்துவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்தீர்களா?
பிரிக்ஸ்..
இந்தக் கோமாளியை கழுத்தில் அடித்து வெளியே தள்ளு!
உன்னை உன் தந்தை வளர்த்த விதம் சரி யில்லை... என்ற போதிலும் நீ புத்தி கெட்டவளில்லை என்றே நம்புகிறேன்.


நீ ஆத்திரப்படுவது உன்னை பிறர் தப்பாக புரிந்து கொள்ள இடமளித்து விடலாம்! இந்த வெறிநாயை கட்டிப்போடு.. இல்லையேல், என்ன நடக்கும் என்று இங்கே பார் புரியும்.
நான் அப்படி என்ன தப்பாக கேட்டு விட்டேன்..?
தூக்கி வெளியில் எறிந்து விடட்டுமா?
வேண்டாம்..! அவர் சொல்வதில் நியாயம் இருக்கிறது.
ஸாரி... காரிகன்! நானோ, அப்பாவோ பத்திரிக்கைக்கு போன் செய்யவில்லை.
எனவே, கடிதத்தை எழுதியவனே போன் செய்திருக்கலாம்!
ஆமாம்..! அதனால்..?
போன் செய்தவனின் பேச்சை பதிவு செய்து வைத்திருக்கிறார் களாம்! அதை வாங்கி வந்து ஒப்பிட்டுப் பார்த்துவிடலாம்.
எங்கள் ஆதரவாளர் களின் குரலோடு.. அப்படித்தானே? உங்கள் கம்ப்யூட்டர் நற்சான்றிதழ் வழங்கிய பின்னரும் உங்கள் சந்தேகம் தீரவில்லையா?
கம்ப்யூட்டரின் நற் சானறிதழ்..! ஆமாம்..! திடீரென்று எனக்கு அதை நினைவூட்டிய உனக்கு நன்றி லாரல்!


ஆனால் - எவ்வகையில் நான் உங்களுக்கு உதவி செய்தேன்...?
கம்ப்யூட்டரின் அறிக்கையை கொண்டு வந்து அதில் ஓர் அம்சத்தை காட்டுகிறேன்.. உனக்கே புரியும்.
கிளிக்
கரெக்ட்! நான் இதை அப்போதே கவனித் திருக்க வேண்டும்!


லாரல்..! இங்கே கவனி -
உன் தாய்வழி சகோதரன் ராவுலைப் பற்றி கம்ப்யூட்டர் அறிக்கை என்ன சொல்கிறது பார்த்தாயா?
எந்தப் புகாரும் இல்லை - நான் சொன்ன மாதிரி!
ஆனால் அவன் 'ராகிங்'கின் போது அரெஸ்ட் செய்யப் பட்டதாக சொன்னாயே!
ஆமாம்! ஆனால் அதன் பிறகு எந்த வம்பிலும் அவன் மாட்டிக் கொள்ளவில்லையே!
பாயிண்ட் என்ன வென்றால் அந்த அரெஸ்ட் விவகாரம் அறிக்கையில் வந் திருக்க வேண்டும்!
ஆனால் வரவில்லை..! அதாவது எங்களுடைய
கம்ப்யூட்டரின் போலீஸ் ரெக்கார்டில் ஏதோ விஷமம் செய்யப் பட்டிருக்கிறது." எனவே, பட்டியலில் உள்ள எவரையுமே நிரபராதி என்று தள்ளி விடுவதற் கில்லை!
அப்படியானால் ராவுல்தான் அந்த 'அச்சுறுத்தல்' கடிதத்தை அனுப்பினான் என்கிறாயா?
மடையா..! நான் என்ன சொல்கிறேன் என்று உன் மரமண்டைக்கு புரியவில்லையா?
என்னதான் சொல் கிறீர்கள்!
எங்களுடைய கம்ப்யூட்டரில் பெரிய அளவில் தில்லு முல்லு நடந்திருக்கிறது.
ஐயோ... பாவம்!


சரி.. அதற்கும் எங்கள் விவகாரத்திற்கும் என்ன சம்பந்தம்?
அந்த தில்லு முல்லை செய்ய வேண்டிய அவசியம்? யாருக்கோ தங்களை காப்பாற்றிக் கொள்ள
வேண்டிய நெருக்கடி! 'அச்சுறுத்தல்' நாடகத்தை அரங் கேற்றியவர்கள் அந்த யாரோவாக இருக்கக்கூடும்!
உனக்கு மறை கழன்று விட்டதா.. காரிகன்.! லாரல்.. ஏதேதோ உளறுகிற இந்த பித்துக்குளியை
உடனே துரத்தியடிக்கச் சொல்லவேண்டும் உன் தந்தையிடம்.
அடுத்து என்ன செய்யப் போகிறாய்?
அந்த மோட்டார் சைக்கிள் கும்பலை விசாரிக்க வேண்டும். அத்தோடு, கம்ப்யூட்டர் பதிவேடுகள் அனைத்தையும் சோதிக்கச் சொல்லி எங்கள் ஆட்களை எச்சரிக்க வேண்டும்!
போலீஸுக்கு தகவல் கொடுத்து உடனடியாக அந்த முட்டை வீசிய கும்பலை தேடிப் பிடிக்கச் சொல்லப் போகிறேன்.
அகப்பட்டால்..?
அவர்களுக்கு அரசியல் ஈடுபாடு இருக்காது. கூலிக்கு அந்த அட்டூழியத்தை செய்திருக்கக்கூடும். அமர்த்தியது யாரென்று அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள முடியும்!
நல்லல யோசனை..! ஆனால் வாயை திறப்பார்களோ?


யாரையும் அரெஸ்ட் செய்ய வேண்டாம் இன்ஸ்பெக்டர் விசாரித்தால் போதும்..
இந்த நம்பர்களில் ஏதாவது ஒன்றில் என்னோடு பேசுங்கள்!
வெகு விரைவிலேயே போன் வரும்.. காரிகன்!
போலீஸாரின் தீவிர நடவடிக்கை உடனடியாக பலனளித்தது.
தலைமையகமா? அந்த மோட்டார் சைக்கிள் கும்பல் பற்றி-
நான் ஃபாக்ஸ் பேசுகிறேன்- அரெஸ்ட் செய்ய வேண்டாம் இல்லையா?
ஆமாம்..! உளவுத் துறையினர் வந்து விசாரிக்கும் வரை நிறுத்தி வை - போதும்!
இன்ஸ்பெக்டர் அனுப்பிய சேதி பிரிக்ஸை எட்டியது!
காரிகனிடம் செய்தியை சொல்லி விடுகிறீர்களா?
ஓ.. யெஸ்!
மிஸ்டர் ஜிண்டரா..? அந்த மோட்டார் சைக்கிள் கூலிகள் உங்களை காட்டிக் கொடுத்து விடுவார் களா என்ன?
அது அற்ப விஷயம்! ஆனால் உளவுத் துறையில் நமக்கு உளவாள் இருக்கிற இரகசியம் அம்பலமாகி விடக்கூடாது!
காரிகனை நான் கவனித்துக் கொள்கிறேன்!
நோ.. நோ - அவன் வெளியே போகும் போது பின் தொடர்ந்து செல்..



நீ என் சகாக்களுக்கு வழிகாட்டினால் போதும்... மிச்சத்தை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்! இதற்காக உனக்கு தனி 'போனஸ்' உண்டு பிரிக்ஸ்!
ஆகா.. கரும்பு தின்னக் கூலியா?
காரிகன் ஓமரின் தலைமையகத்துக்கு திரும்பினார்.
ஏய்.. இந்தா - உனக்கு வந்திருக்கிறது
நன்றி..!
ஹா.. ஹா.. அவன் கிளம்பி ஒரு நிமிடம் கழித்து நான் பின் தொடர வேண்டும்!
காரிகனை பின் தொடர உங்களுக்கு பிரிக்ஸ் வழி காட்டுவான்.
கோட்டை விட்டுவிடக் கூடாது... புரிந்ததா? அப்படியே பிரிக்ஸின் கதையையும் முடித்துவிடுங்கள்.
காரிகனின் மரணம் தற்செயலான விபத்துப் போல அமைய வேண்டும்.
ம்ம்.. பிரிக்ஸ்.. என்ன இருந்தாலும் நம் கூட்டாளி அல்லவா?
நமக்கு ஒத்துழைப்பு தருகிறானே தவிர நம்மில் ஒருவன் அல்ல. அத்தோடு அவன் தகுதிக்கு மீறி பேராசைப்படுகிறான்!


குறியீடு - அவனுக்கு ''கைட்''.. உங்களுக்கு ''ஸ்க்ரைப்''..
'கைட்'டிடமிருந்து 'ஸ்க்ரைப்'புக்கு.. நான் பேசுவது கேட்கிறதா?
ஓ.. தெளிவாக!
தன்னுடைய சமாதிக்கு தானே வழிகாட்டுகிறான்!
ஐயோ.. பாவம்..! ஹா..ஹா..!
ஓட்டு சேகரிக்கவே இந்த போலி 'மிரட்டல்' என்றால் எனக்கு இங்கே வேலை இல்லை. ஆனால் - நிஜமாகவே ஏதோ ஒரு விபரீதம் உருவாகி வருகிறதாக தோன்றுகிறது.
மோட்டார் சைக்கிள் ஆசாமி என்னதான் சொல்கிறான்.. பார்ப்போம்!
அதோ.. பிரிக்ஸ்! சமிக்ஞை காட்டு!
ம்ம்.. சீக்கிரம்.. போங்கள் - அவனை பிடித்தாக வேண்டும்.
ஓ. கே.


ஆனால் அதற்கு முன் அவசரமாக ஒரு காரியத்தை முடிக்க வேண்டியிருக்கிறது.
பாவம் பிரிக்ஸ்!
குரூரமான முடிவு அவனை அரவணைத்தது!
படீர்ர்!
சரி.. நீ காரிகனை முந்திக் கொண்டு போ..
தகவல் கொடுத்ததும் மோத வேண்டும்!
மரணம் தன்னை கபளீகரம் பண்ண நெருங்கி வந்து கொண்டிருப்பதை அறியாத காரிகன் சிந்தனையோடு போய்க் கொண்டிருந்தார்.
விர்ர்ர்ர்ர்!
என்ன இவன்.. இப்படி ஓட்டுகிறான்..!
படுபாவி.. குடித்து விட்டு வந்திருப்பானோ?
மறு திருப்பத்தில் -
பயல் லேசுப்பட்டவனில்லை போலிருக்கிறது!


அதோ.. மறுபடியும் வருகிறானே!
ஓகோ.. பயலுடைய நோக்கம் தெளிவாக புரிகிறது!
நேராக தன்னை நோக்கி வந்த டிரக்கின் பாதையிலிருந்து சட்டென்று விலகி.. ஊஹூம்.. பயங்கரமாக உரசிக் கொண்டுவிட்டது.
கிரீச்!
விர்ர்ரூம்ம்
வாடா.. நானும் ஆட்டத்தில் கலந்து கொள்ள ரெடி!
காரிகன் சட்டென்று பிரேக்கை அழுத்தினார். மோதல் தவிர்க்கப்பட்டது.
எதிரியின் டிரக் மீண்டும் துரத்தி வந்தது..
மறுபடியும் காரிகனின் காரோடு மோதும் உத்தேசத்தோடு நெருங்கியது..


டிரக் சட்டென்று நின்றது.
கீ.கீ.கீ.....
காரிகன் இம்முறை குபீர் என்று வண்டியை செலுத்தினார். விளைவு -
கொலைகாரனோ, குடிகாரனோ.. உதவி செய்வது என் கடமை
ஆனால் - எதிரே..
பயங்கரம்..! ஆனால் நம் ஆள் குதித்து வெளியேறி தப்பி யிருப்பான்!
!
இல்லை.. செத்து விட்டான்! இதோ - பழிக்குப் பழி!



இவன்தான் நாடக சூத்ரதாரியா..?
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
உருக்குலைந்து கிடந்த காரை நெருங்கினார் காரிகன்
போய்விடு - நெருங்கினால் சுடுவேன்
பெட்ரோல் வழிந்து ஓடுகிறது. உயிரோடு எரிக்கப்பட வேண்டும் என்று ஏதாவது பிரார்த்தனையா?
ஐயோ.. துப்பாக்கி இல்லை.. காப்பாற்று என்னை
காப்பாற்றுகிறேன்.. ஆனால் அதற்கு முன் ஒரு பெயர் தெரிய வேண்டும்!
ஊஹூம்.. என்னை நீ கட்டாயப்படுத்த முடியாது!
ஓ.கே.! அப்படி யானால் ஆம்புலன்ஸையும் உயில் எழுத, உன் வக்கீலை யும், வர்வழைக்கிறேன் - நீ அது வரை தாக்குப்பிடி!
ஐயோ.. அங்கே புகை
ஜின்டர்! ஜிண்டர்! சைத்தானே - என்னை காப்பாற்று!



ஓகோ. அந்த கடத்தல் மன்னனா? விஷயம் ஓமருக்குத் தெரியுமோ?
ஜிண்டர் வேறு எதையும் என்னிடம் சொல்லவில்லை.. ஐயோ.. என்னை வெளியே இழு!
பிரிக்ஸ்? அவனை தீர்த்துக் கட்டி விட்டீர்களா?
ஆ..ஆ..மாம்..! என்னை வெளியே இழுத்துத் தொலை சனியனே..
ஒரு டாக்டரும், ஒரு வக்கீலும் எனக்கு அவசரமாகத் தேவை..!
முதலில் போலீஸ் வரும் - மிச்சம் எல்லாம் அப்புறம் தான்!
ஹலோ.. ரூட் எண் 787ல் ரோந்து படை ஏதாவது உண்டா?
போலீஸா..? இங்கே பார்.. இரத்தம் விரயமாகி நான் செத்துப் போய்விடுவேண்டா.
அப்படி நேர்ந்தால் நஷ்டஈடு கோரி என் மீது வழக்குப் போட உனக்கு உரிமை உண்டு..!
காயம் மோசம் இல்லை..! உடனிருந் தவன்தான் செத்துப் போய்விட்டான்.
மரணத்திற்கு காரணம் விபத்து இல்லை.. யாரோ கட்டிருக் கிறார்கள்.. பெயர் - ராவுல்
இல்லை.. பிரி.. - ஹே.. என்ன சொன்னீர்கள்?


ராவுலா..? எதை வைத்து பெயரை கண்டு பிடித்தீர்கள்?
அவனுடைய பாக்கட்டிலிருந்த துண்டுச் சீட்டில் எழுதியிருந்தது.
பிரிக்ஸுக்கு..
ராவுல்...
பிரிக்ஸுக்கு - அப்படி யானால் அவனும் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவன்தானா!
இதெல்லாம் என்ன குழப்பம் மிஸ்டர்.. - ?
ராவுலுக்கு ஆபத்து என்று புரிகிறது.. எனக்கு உடனடியாக வாகன வசதி வேண்டுமே.
ஏற்பாடு செய்கிறேன் மிஸ்டர் காரிகன்
ஓமர்..! இப்போதா வது நம்புகிறீர்களா?
வேறு வழி? தேர்தலிலிருந்து இக்கணமே விலகிக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்!
முடியும் என்றா நினைக்கிறீர்கள்?
ஏன்.. யார் என்னை தடுக்க முடியும்?
உங்களுக்குத் தெரியாமலேயே கடத்தல்காரர்களின் பணத்தை இதுவரை நீங்கள் பிரச்சாரத்திற்கு செலவிட்டிருக் கிறீர்கள்
அவர்களைப் பொறுத்த மட்டில் இது ஒரு எழுதப்படாத ஒப்பந்தம்! பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று நீங்கள் சொன்னாலும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள்.



காரிகன்.. ஜிண்டரின் மோசடி ஊரறிந்த சங்கதியாகிவிட்டது. இப்போது.. இனியும் அவனால் என்ன ஆபத்து வர முடியும்?
அவனை மாதிரி எத்தனையோ கொலைகாரர்களை, கொள்ளைக்காரர் களை, கடத்தல்காரர்களை
சட்டத்திற்கு அடையாளம் தெரியும். இருந்தும் அவர்களை என்ன செய்துவிட முடிந்தது..!
ஜிண்டரின் பங்கை நிரூபிக்க ஏது ஆதாரம் - நம்மிடம்?
அவர்களை சட்டத்தின் பிடியில் கொண்டு வர வழியே இல்லையா?
ஒரு முயற்சி செய்து பார்க்கலாம் என்று தோன்றுகிறது.
ஆனால்.. லாரல், ராவுல் இருவரின் கதியை எண்ணிப் பார்த்தீங்களா?
பிரஸிடெண்ட் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்து கயவர்களின் ஆசையில் அப்பா மண்ணைப் போட்டால் எதிரி களால் எனக்கும்.. ராவுலுக்கும்..
ஆமாம்.. உயிருக்கே ஆபத்து வரலாம்!
ஆனால் அப்பாதான் ஜெயிக்கப் போவதில்லையே!
பிரஸிடெண்ட் தேர்தலில்.. இம்முறை.. ஜெயிக்காவிட்டால், எதிரிகள் அடுத்து அவரை செனட்டராக வாவது ஜெயிக்க வைக்கப் பார்ப்பார்கள்.
அப்படியானால் பொறியில் அகப் பட்டுக் கொண்டு விட்டோமா நாங்கள்?
பொறி..! ஆகா.. சரியான சமயத்தில் நினைவு படுத்தினாய்.. அந்த வார்த்தையை!


ஜிண்டரிடம் தெளிவாக சொல்லி விடுங்கள் - நீங்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டு விட்டதாகவும், உங்களுக்கும்,
லாரனுக்கும் உளவுத் துறையின் பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது என்றும்!
ராவுல்?
அவனை நான் பார்த்துக் கொள்கிறேன்..! ஜிண்டரிடம் ராவுலைப் பற்றி மூச்சு விடாதீர்கள்!
அடுத்து -
ராவுல்? இதை கவனமாகக் கேள்...!
ஓ.கே..! கச்சிதமாக நடந்து கொள்வேன் ஸார்!
டாம்.. இந்தா?
ஓ.கே. காரிகன்! உன் சூழ்ச்சி நிச்சயம் பலிக்கும்!
பழைய யுக்திதான் - ஆனாலும் நம்பகமானது!


ஜிண்டர் போனில் இருக்கிறான்.. ஓமர்! அவனிடம் சொல்லி விடுங்கள்!
தேர்தலிலிருந்து விலகிக் கொள்கிறேன் ஜிண்டர்... மாற்றிக் கொள்வதற்கில்லை. எனக்கும் ராவுலுக்கும் உளவுத்துறையின் முழுப்பாதுகாப்பு நல்கியிருக்கிறார்கள் என்பதையும் நீ தெரிந்து கொள்வது நல்லது.
ஜிண்டரின் போன் ஒட்டுக் கேட்கப்பட்டது!
ஸ்கர்வியா? ஜிண்டர் பேசுகிறேன்... உடனடியாக நீ ஒரு காரியம் பண்ண வேண்டும்! ராவுல் என்ற ஒரு பயலை தீர்த்துக் கட்ட வேண்டும்!
மறு நிமிடம் -
டாம்? இன்றிரவு அவன் கிளம்புகிறான்..
அடேயப்பா.. எதிரிகளின் எண்ணப் போக்கை எவ்வளவு கச்சிதமாக வடித்தறிந்து வைத்திருக்கிறாய்..!
மாலையில் - நார்த் சென்ட்ரல் யுனிவர்ஸிடியில்...
ராவுல்? உன் தந்தை சென்ற பிரச்சார விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கிறது. உடனடியாக உன்னை அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்கள்.
டாடி? ஹரல்? ஐயோ... ஆபத்தா - ?
காரிகன் எதிர் பார்த்தபடியே ராவுலை கடத்துவதற்கான முயற்சி அரங்கேறியது! முன்னதாகவே விபரமறிந்த ராவுலும் அந்த நாடகத்தில் நடித்தான்!


அவர்கள் பிழைத்துக் கொள்வார்களா?
திடீரென்று -
சாலைத் தடை... வண்டியை திருப்பு.... சீக்கிரம்
இல்லை..! மெதுவாக நேரே அங்கே போய் வண்டியை நிறுத்து!
ராவுல் கையில் துப்பாக்கியைக் கண்டு திகைத்தனர் எதிரிகள்
அதைத் தொடர்ந்து
உன் உத்தரவின் பேரில் ராவுலை கடத்த முயன்ற உன் கைக்கூலிகள் பிடி பட்டிருக்கிறார்கள்.
எ..எ..ன்..ன்... பிடி பட்டுவிட்டார்களா...?
ஆ..ஆனால்.. என்னை காட்டிக் கொடுக்க மாட்டார்கள்!
ஆனால் அவர்களை நீ போலீஸாரிடம் மாட்டி விடவே, அந்தப் பக்கம் அவர்களை அனுப்பிவிட்டு, போலீஸுக்கு தகவல் கொடுத்து துரோகம் பண்ணிவிட்டதாக நினைக்கிறார்கள்...
பொய்..! அவர்கள் அப்படி நினைக்கவே மாட்டார்கள்.



உன் விஷமத் தனங்கள் அத்தனையையும் உளறிக் கொட்டி விட்டார்கள் ஜிண்டர்..
எ..என்னை அரெஸ்ட் செய்யப் போகிறாயா.. நோ-
ஓமர்..! சுயநல மிகளின் சூழ்ச்சி அம்பலமாகிவிட்ட இந்நிலையில் போட்டியிலிருந்து நீங்கள் விலக வேண்டிய அவசியம் ஏதுமில்லை.. வெற்றி வாய்ப்பு உறுதி என்று கருத்துக் கணிப்பு சொல்கிறது!
நோ.. நோ.. அது முறையல்ல.. அம்மாதிரியான வெற்றி எனக்குத் தேவையில்லை.
காரிகன்.. திடீரென்று காலண்டரை புரட்டு கிறீர்கள்?
திடீரென்று 1850ம் ஆண்டில் இருக்கிறோமா என்ற பிரமை ஏற்பட்டது எனக்கு.. அதனால்தான்!
* 1850ல் ஹென்றி கிளே சொன்னார் :- "பிரஸிடெண்டாக இருப்பதைவிட நேர்மை யாளனாக இருப்பதையே நான் விரும்புகிறேன்".
முற்றும்


ஒரு அயல்நாட்டு பிரஸிடெண்டின் வருகையை நேரடியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தது டி. வி.,
பிரஸிடெண்ட்டின் கார் இதோ ஸ்டேஷனை விட்டுக் கிளம்பி விட்டது...
13, மார்வெல் தெருவில், டோனி அந் நிகழ்ச்சியை டி.வி. யில் பார்த்துக் கொண்டிருந்தான்... டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் டாம்கின்ஸ்"ம், உளவாளி பாஸ்டரும் உடனிருந்தனர்...
ஏன் சஞ்சலத்தோடு காணப்படுகிறாய்... பாஸ்டர்?
பிரஸிடெண்ட்டை இங்கே - இலண்டனில் சுட்டுக் கொல்ல சதித் திட்டம் ஒன்று உரு வாகியிருக்கிறது... அது பற்றி எங்களுக்கு துப்புக் கிடைத் திருக்கிறது.
போன வாரம்... ஹோட்டல் ஒன்றில் இரண்டு நபர்கள் இரகசியமாக பேசிக் கொண்டதை ஒரு பணிப்பெண் தற்செயலாக கேட்டிருக்கிறாள்.
ஓ. கே.. பதினெட்டாம் தேதி பிரஸிடெண்ட் இங்கே வந்து சேரு கிறாராக்கும் - அப்புறம்?
மறுநாள் அவர் சுட்டுக் கொல்லப்படுவார்!
H. H. B. அந்தக் கொலையை செய்து முடிப்பான் - டெலஸ் கோப் பொருத்தப்பட்ட ரைபிளினால்! பதினெட்டாம் தேதி மாலையிலேயே அவன் இலண்டன் வந்தடைந்து விடுவான்.



கலவரமடைந்த அந்தப் பெண் வெளியே ஓடிச் சென்று ஒரு போலீஸ் அதிகாரியை அழைத்து வந்தாள்...
அந்த ரெண்டு ஆசாமிகளா...? பில்லுக்கு பணம் செலுத்தி விட்டு இப்போது தான் வெளியேறினார்கள்...! எதற்காக கேட்கிறாய்?
நாளை பிரஸிடெண்ட் ஒரு விருந்தில் கலந்து கொள்கிறார். அதைத் தொடர்ந்து ஊர்வலம் ஒன்று நடக்கவிருக்கிறது. அந்தப் பயல் H. H. B. அப்போது எங்கே யாவது ஒளிந்திருந்து பிரஸிடெண்ட்டை சுடக் கூடும். கொலை செய்யப் போகிறவனை இப்போதே அடையாளம் தெரிந்து
கொள்ள உன் மெஷின் உதவி செய்யக் கூடும் என்று கருதி சீஃப் என்னை இங்கே அனுப்பி வைத்தார்
ஜானியைக் கேட்டுப் பார்ப்போம்!
ஜானியின் பதில் உடனே வந்தது...
H. H. B என்பது யாரோ -தெரியவில்லை! அது மட்டுமல்ல.. என்னை 'மெஷின்' என்று விளிப்பதை நான் ரசிக்கவில்லை! - எனக்கென்று ஒரு பெயர் இருக்கிறதல்லவா?
அங்கலாய்ப்போடு எழுந்து புறப்பட ஆயத்தமானார் பாஸ்டர்!
அப்போதே சீஃப்பிடம் சொன்னேன் - இங்கே போவதில் எந்தப் பயனும் இராது என்று!
H. H. B. எந்த விபரீதமும் நிகழ்த்துமுன் அவனை இன்னார் என்று கண்டுபிடிக்க எங்களால் முடியும் என்றே நம்புகிறேன். உனக்கும் உன் மெஷினுக்கும் என் நல்வாழ்த்துக்கள்!



மறுநாள் காலையில் 13 மாக்வெல் தெருவுக்கு பாஸ்டர் போன் செய்தார்
H.H.B. யாரென்று கண்டுபிடித்து விட்டீர்களா?
சுலபமாக! அவனுடைய படம்தான் இன்றைய பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் வெளியாகி யிருக்கிறதே!
ஓடிச் சென்று செய்தித் தாளை எடுத்துப் பார்த்தான் டோனி...
டெய்லி க்ளாரியன்
ஹால்வேயின் ஹராங்க் பிரவுனின் வருகை! நகரில் பரபரப்பு!
H.H.B. என்பது அந்த பாப் இசை மேதை என்றா சொல்கிறீர்கள்!
அதில் உனக்கு சந்தேகமா?
அவ்வப்போது அரசியல் போராட்டங்களில் அவன் பங்கெடுப்பதுண்டு என்ற உண்மை ஞாபகம் வரவில்லையா உனக்கு?
இன்னொன்றையும் தெரிந்து கொள்... பிரஸிடெண்ட்டின் ஊர்வலம் - செல்லும் பாதையில் உள்ள ஒரு பல அடுக்கு மாடி ஹோட்டலில் சாலையை பார்த்தவாறு உள்ள ஓர் அறையை அவன் முன்கூட்டியே பதிவு செய்து கொண்டிருக்கிறான்!
பாப் இசை மேதையை கைது செய்ய பாஸ்டர் போய்க் கொண்டிருக்கிறார் என்ற தகவலையும் ஜானிடம் டோனி பதிவு செய்தபோது அது இவ்வாறு பதில் கொடுத்தது :-
அந்த இசைமேதையை நன்கு அறிந்தவன் நான் என்பதால் அடித்துச் சொல்கிறேன் - இந்தக் கொலையை அவர் செய்ய முடியாது!
திட்டமிட்டே போலீஸாரின் கவனத்தை திசை திருப்பி யிருக்கிறார்கள் சதிகாரர்கள் என்பது என் கணிப்பு!


சிறிது நேரத்திற்குப்பின், பாஸ்டர் சில உதவியாளர்களோடு பாப் இசை மேதையின் ஆடம்பர ஹோட்டல் அறையினுள் திடுமென நுழைந்தான் -கையில் உயர்த்திப் பிடித்த துப்பாக்கியோடு!
ஹே.. யார் நீங்கள்?
ம்ம்.. எழுந்துநின்று கைகளை தூக்கு ப்ரௌவுன்
ரைபிள் கிடைக்கிறதா என்று அறை முழுக்க தேடுங்கள்!


அந்த அறையிலிருந்த அத்தனை பெட்டிகளையும் பைகளையும் குடைந்து பார்த்துவிட்டார்கள். தோல்வி!
ரைபிள் எதையும் காணோமே சீஃப்
தெரியாமல்தான் கேட்கிறேன்... ரைபிளை நான் எதற்கு வைத்துக் கொண்டிருக்கப் போகிறேன்?



ப்ரௌவுனை ஜன்னலருகே அழைத்துச் சென்றார் பாஸ்டர்
நீ இங்கே இலண்டனுக்கு வந்திருப்பதே பிரஸிடெண்டை கொலை செய்யத்தான் என்று நாங்கள் அறிவோம். இங்கிருந்து ஊர்வலத்தில் வரும் அவரை சுடுவது தானே உன் நோக்கம்?
உங்களுக்கென்ன பைத்தியமா?
இதற்கிடையே 13- மார்வெல் தெருவில் டோனிக்கும் டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் டாம்கின்ஸுக்கும் ஏகப்பட்ட ஆச்சரியம்...
ஹொல்லேரின் ஹாங்க் அப்பாவி என்று எப்படி ஜானியால் அவ்வளவு தீர்மானமாக சொல்ல முடிகிறது?
அதையே கேட்டுப் பார்ப்போம்!
ஜானியின் பதில் -
ஹொல்லேரின் ஹாங்கின் விசிறிகள் எல்லோருக்குமே தெரியும் அவர் மிக சக்தி வாய்ந்த காண்டாக்ட் லென்ஸ் அணியாமல் எதையுமே பார்க்க முடியாது என்று.
அந்த அளவுக்கு பார்வை கோளாறு இருக்கிற நபர் எப்படி இவ்வளவு தூரத்திலிருந்து, நகர்ந்து கொண்டிருக்கிற காரில் இருக்கிற நபரை சரியாக குறி வைக்க முடியும்?


ஆக... இது திட்டமிட்டு கவனத்தை திசை திருப்பும் சூழ்ச்சி!
வேண்டுமென்றே அந்த பணிப் பெண்ணின் காதில் விழுகிறமாதிரி உரையாடி யிருக்கிறார்கள்!
உளவுத்துறையினரின் கவனம் ஹெரால்டோரின் ஹாங்க் மீது திரும்பி யிருக்கையில் கொலை காரன் குறுக்கீடு ஏதுமின்றி தன் காரியத்தை கச்சிதமாக செய்து முடிக்க முடியும் என்பது எதிரிகளின் திட்டம்!
அதே வினாடியில் மீண்டும் ஜானியிட மிருந்து ரீங்கார ஒலி எழும்பியது..
டிக்கிறேன்-கேளுங்கள்:
பிரஸிடெண்ட் இவ்வினாடியில் கலந்து கொண்டிருக்கும் விருந்தில் ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்றொரு உறுத்தல் எனக்கு ஏற்படுகிறது.
விருந்துக் கான உணவுப் பதார்த் தங்களை தயாரித்த மாஸ்டர் யாரென்று விசாரிக்க வேண்டியது அவசியம் -அவசரமும் கூட!
இதோ.. இப்போதே போன் செய்கிறேன்!
மறுமொழி உடனே கிடைத்தது...
வழக்கமாக உணவு தயாரிக்கும் மாஸ்டரை நேற்றிரவு சாலையில் ஒரு இனம் தெரியாத டிரக் மோதிக் கொன்றுவிட்டு தலை மறைவாகிவிட்டதாம். புது மாஸ்டர் ஒருவன் இன்றைக்கு காலையில் பொறுப்பேற்றானாம்!
ஸார்... இதுக்கு அர்த்தம் என்னவென்று உங்களுக்கே விளங்கு கிறதல்லவா?


வா.. போவோம்!
அப்புறமாக சந்திப் போம்... ஜானி!
அவர்கள் சென்ற கார் தலை தெறிக்கும் வேகத்தில் விரைந்தது..
போனிலேயே நாம் விஷயத்தை சொல்லி யிருக்கலாமோ?
அவகாசம் இல்லை...! அப்படியே நாம் போன் பண்ணியிருந்தாலும் யாரும் நம் கூற்றை நம்பியிருக்க மாட்டார்கள்!
அவர்கள் சென்றடைந்த போது, அப்போதுதான் மேல்மட்ட விருந்தினர்கள் முதல் அயிட்டமாக இனிப்பு பலகாரத்தை சுவைக்கத் தொடங்கி யிருந்தார்கள். டாம்கின்ஸ் நேராக பிரஸிடெண்ட்டை நோக்கிப் பாய்ந்தார்.
வேண்டாம்... அதை சாப்பிடாதீர்கள்!
வாயை நோக்கி உயர்ந்த பிரஸிடெண்ட்டின் கையை விசையோடு தட்டிவிட்டார்! ...
என்ன... இது கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல்!
இவருடைய உயிரை காப்பாற்ற எனக்கு வேறு வழி தோன்றவில்லை..






பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும்
வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 20649.
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு எண்: 65


1589 ம் வருடம் ஆகஸ்டு மாதம் 9ந் தேதி இருள் கவிழும் வேளையில் ஒரு ஸ்பானிஷ் கப்பல் காலைஸ் அருகே யிருந்த சிறு வளைகுடா பகுதியினுள் புகுந்து திக்குமுக்காட்டத்தோடு பதுங்கிக் கிடந்தது. அந்தக் கப்பலை பின் தொடர்ந்து வந்த மூன்று பிரிட்டிஷ் கப்பல்களும் சற்றுத் தொலைவில் நங்கூரம் பாய்ச்சி, விடியட்டும் என்று காத்துக் கிடந்தன. விடிந்ததும் வளைகுடா பகுதியினுள் புகுந்து அந்த ஸ்பானிஷ் கப்பலை துவம்ஸம் செய்வது அவர்களுடைய நோக்கம்...
வரலாற்றில் ஒரு விடுகதை!
கும்மிருட்டு போர்த்து நின்ற அந்த இரவு முழுக்க, அனுபவம் மிக்க பிரிட்டிஷ் காப்டன் தன் ஊழியர்களை உறங்க விடவேயில்லை...
இந்த காரிருளில் நைச்சிய மாக வெளியேறி ஓட அவர்கள் துணிய மாட்டார்கள் என்பது சர்வ நிச்சயம்! அப்படியே ஒருவேளை அவர்கள் புறப்பட்டாலும், ஏற்படும் சலசலப்பு நமக்கு கேட்காமல் போகாது!
ஆனால்... கிழக்கு வெளுத்து வெளிச்சம் மெலிதாக பரவத் தொடங்கியதும் அந்த பிரிட்டிஷ் காரர்கள் பெருத்த அதிர்ச்சிக்கு ஆளானார்கள்...
மோசம் போய் விட்டோம்...! அந்த சண்டாளர்கள் எப்படியோ நம் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தப்பியோடி விட்டார்கள்!



பிரிட்டிஷ் காப்டன் கோபத்தால் ஆங்காரமாக கத்தினான்.... ஒருவர் பாக்கி இல்லாமல் ஊழியர்கள் அனைவரையும், மோப்ப நாயையும் கூட - வசைபாடித் தீர்த்தான்...
ஏய்.. தூங்கு மூஞ்சி நாயே.... காவல் நாயான உனக்குக் கூடவா கை எட்டும் தொலைவில் நம்மை கடந்து போன அவர்களுடைய கப்பல் எழுப்பிய சலசலப்பு கேட்கவில்லை...?
இது நடந்த பின் மூன்று மாதங்கள் கழித்து அந்த ஸ்பானிஷ் கப்பலின் காப்டன் மாட்ரிட் சென்றடைந்தான். அரசர் பிலிப்பை தான் சந்திக்க விரும்புவதாக வேண்டுகோள் ஒன்றை விடுத்தான்.
இவர் - கலியன் கப்பல் 'டோரோ' வின் காப்டன் மிக்குவல் டா கோஸ்டா... அரசே!
காப்டனின் கூற்றைக் கேட்ட அரசர் அதை நம்பமுடியாதவராக கேள்விக்கணைகளை தொடுத்தார்....
பிரிட்டிஷ் கப்பல்கள் வளைத்து நின்ற அந்த நெருக்கடியான வேளையில் துணிச்சலாக, தந்திரமாக அங்கிருந்து நழுவித் தப்பிய உங்களுடைய திறமை பாராட்டுக்குரியது காப்டன்...! அப்புறம் என்ன நடந்தது...?
கப்பலில் விலை மதிப்பற்ற பொக்கிஷங்கள் இருந்ததால் காடிஸுக்கு உடனடியாக திரும்பிவிட நான் தீர்மானித்தேன். ஆனால் வழியில் பிஸ்கே வளைகுடா பகுதியில் இயற்கையின் சீற்றத்திற்கு உள்ளானோம் அரசே!


சுழன்றடித்த சூறாவளிக் காற்றுக்கு
தாக்குப் பிடிக்க முடியாமல் கப்பல்
மூழ்கிப் போனதாக காப்டன்
கோஸ்டா சொன்ன தகவல்
அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு
நிலைத்தது..
மூழ்கிய கப்பலிலிருந்து
வெளியேறிய சிப்
பந்திகள்,
கொந்தளித்துக்
கொண்டிருந்த அலை
களினால் கபளிகரம்
செய்யப்பட்டு
மாண்டுபோக,
காப்டன் மட்டுமே
கடும்
பிரயத்தனத்தின்
பேரில் உயிர்
தப்பி கரையேறிய
தாக தகவல் ஏடுகள்
கூறின..
எப்போதோ நடந்த இச்
சம்பவம் பற்றிய
கட்டுரை ஒன்று
நாளேட்டில் வெளி
யானதை படித்த
டோனி, அனைத்து
விபரங்களையும்
தன் கம்ப்யூட்டரான
ஜானியிடம் பதிவு
செய்தான்.
பிஸ்கே வளைகுடா
பகுதியில் மூழ்கிப்
போன 'டோரோ'
கப்பலை கண்டு
பிடித்து அதில்
இருந்த
பொக்கிஷங்களை
மீட்டு சொந்தமாக்கிக்
கொள்ளும் நோக்கத்
தோடு
தொடங்கப்பட்ட
ஒரு மீட்பு கம்பெனி
கடந்த பத்து ஆண்டு
களாக தொடர்ந்து
முயன்று
கொண்டிருக்கிறது
ஜானி...


கடல் படுகையில் சிதைவு ஏதேனும் இருப்பதாக கருவிகள் பதிவு செய்யும் ஒவ்வொரு முறையும் அது 'டோரோ'வாக இருக்குமோ என்ற ஆவலோடு முழு மூச்சில் ஆராய்ச்சியை தொடர்ந்து தோற்றுக் கொண்டிருந்தது அந்த சிறுவனம்.
நேர் கீழே கப்பல் ஒன்று முழு அளவில் கிடப்பதாக கருவிகள் தெரிவிக்கின்றன... இம்முறையாவது அதிர்ஷ்டத்தின் பார்வை நம்மீது விழவேண்டும்!
ஊஹும்... ஒவ்வொரு முறையும் அவர்களுக்குத் தோல்விதான்!
அனைத்து தகவல்களையும் பதிவு செய்த பின் தன் கண்டு பிடிப்பான ஜானியிடம் கேள்விகளை கேட்கத் தொடங்கினான் டோனி...
அடேய்.. அதிமேதை டோனி! பிஸ்கே வளைகுடா மிக பரந்து விரிந்த கடல் பரப்பாயிற்றே, அதில் எங்கோ மூழ்கிப் போன 'டோரோ'வை இந்த மீட்புக் கம்பெனியினர் கண்டுபிடிக்கும் வாய்ப்பு புள்ளிவிபர கணக்கின்படி எத்தனை சதவீதம் என்று கொஞ்சம் சொல்லேன்!


டக்கென்று பதிலை அச்சிட்டுக் கொடுத்தது ஜானி..
டோனி.. இந்த 'அதிமேதை' ங்கிற கிண்டல் பேச்செல்லாம் வேண்டாம்- புரிந்ததா! சரி.. விஷயத்திற்கு வருவோம்! மீட்பு கம்பெனியினர்
பிஸ்கே வளைகுடா பகுதியில் அந்த கப்பலை கண்டுபிடிக்க சாத்தியமே யில்லை. ஏனென்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவர்களுக்கு இருந்தால் உடனடியாக என்னை வந்து பார்க்கச் சொல். 'டோரேர்' எந்த இடத்தில் மூழ்கிக் கிடக்கிறது என்ற உண்மை எனக்குத் தெரியும்!
பத்து ஆண்டுகள் இடைவிடா முயற்சி பலனளிக்க வில்லை. கடைசி முயற்சி யிலும் தோல்விதான்... இனியும் பணத்தை விரயமாக்க வசதி போதாத நிலையில் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது...
ஹூம்... நமக்கு அதிர்ஷ்டம் இல்லை... கைப்பொருள் வீணானது தான் நாம் கண்ட பலன்...
ஆனால் அந்த புதையல் வேட்டையர்களுக்கு ஒரு உற்சாகமூட்டும் செய்தி வந்து சேர்ந்தது...
அற்புத கம்ப்யூட்டர் ஜானியை வைத்திருக்கும் சிறுவன் டோனியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது.. "13, மார்வல் தெருவுக்கு நீங்கள் வந்தால் உங்களுக்கு உபயோகமான தகவல்கள் கிடைக்கும்."


அவர்கள் அங்கே போய்ச் சேர்ந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ
வாருங்கள்... நிச்சயம் வருவீர்கள் என்று எதிர் பார்த்தேன்
டோனியின் கம்ப்யூட்டர் ரீங்கார ஓசையோடு இயங்கத் தொடங்கியது...
பொறுமையாக இருங்கள் காப்டன்... இது நம்மோடு உரையாடப் போகிறது!
சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்த விபத்து நடந்த இரவுக்கு நாம் இப்போது செல்வோம். காலைஸ் அருகே உள்ள வளைகுடா பகுதியில் மூன்று பிரிட்டிஷ் கப்பல்களினால் முற்றுகையிடப்பட்ட நிலையில் பதுங்கிக் கிடக்கிறது, ஸ்பானிஷ் கப்பல்- 'டோரோ'!
ஜானி தொடர்ந்தது : 'கப்பலில் தன் சக அதிகாரிகளோடு காப்டன் கோஸ்டா தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கும் காட்சியை கற்பனை செய்து கொள்ளுங்கள்....
இப்போது நாமே நம் கப்பலில் ஓட்டை போட்டு மூழ்கடிக்கப் போகிறோம்!
அப்படியானால்.... பொக்கிஷங்கள்?
இருள் போர்வையின் மறைவில் சிறு படகுகளில் பொக்கிஷங்களை ஏற்றிக் கொண்டார்கள்....



"அங்கே நடந்தது பிரிட்டிஷ் கப்பல்களில் இருந்த எவருக்குமே - மோப்ப நாய் உள்பட - தெரியாது"
அவர்கள் அங்கேயே பதுங்கிக் கிடக்கிறார்கள்... விடிந்ததும் தப்பியோடப் பார்ப்பார்களா... இல்லை.. எதிர்த்துத் தாக்க முற்படுவார்களா என்று பொறுத்திருந்து பார்போம்!
"நீர் திறப்பை திறந்து விட்டதும் குபு குபு வென்று உட்புகுந்த கடல் நீர் கப்பலை மூழ்கடித்தது பரம இரகசியமாக!"
குட் - பை 'டோரோ'!
ஜானி தொடர்ந்து - "பிரெஞ்ச நாட்டுப்புற பகுதியில் எங்கோ ஓரிடத்தில், தாங்கள் கடத்தி வந்த பொக்கிஷங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்கிறார்கள். டோரோவிலிருந்து கிளம்பிய காப்டனும், சக ஊழியர்களும்
ஒவ்வொருவருக்கும் வாழ்நாள் முழுக்க போதுமான தொகை கிடைத்துவிட்டதல்லவா.. வட ஐரோப்பா பகுதியில் எங்கே யாவது போய் குடியேறி விடுங்கள்.. ஸ்பெயின் பக்கமே இனி தலைகாட்டக்கூடாது..!


பிரிட்டிஷ் கப்பல்களின் பிடியிலிருந்து தந்திர மாக தப்பித்துக் கொண்டு விலகி ஓடிய பிறகு, வழியில் சூறாவளி காற்றில் கப்பல்
விப்த்துக்குள்ளாகி மூழ்கியதில் மற்ற அனைவரும் உயிரிழக்க தான் மட்டுமே தெய்வாதீனமாக தப்பிப் பிழைத்ததாக சொல்லிக்கொண்டு ஸ்பெயின் போய்ச் சேர்ந்த காப்டன், தன் வீர சாகஸ செயலைக் கேட்டு பாராட்டிய அரசர் அளித்த வீர விருதை வாங்கி அணிந்து கொண்டு பின்னர் நெடுங்காலம் வரை சுகபோகமாக வாழ்ந்தான்.
கொடுத்திட்டு நீங்க தைஸா தப்பிச்சு ஓடின.
அந்தக் கதையை இன்னொரு வாட்டி சொல்லுங்க தாத்தா... கேட்கிறோம்!
விபரங்கள் அனைத்தையும் சொல்லி முடித்ததும் அந்த புதையல் வேட்டையர்களுக்கு உண்மை வெட்ட வெளிச்சமாகிவிட்டது..
அதை மேலே கொண்டு வந்து விட்டால் - பொக்கிஷங்கள் இல்லை என்ற போதிலும்-கணிசமான தொகை கிடைக்கும் எங்களுக்கு!
இனி 'டோரோ'வை தேடிக் கண்டுபிடிப் பதில் எங்களுக்கு சிரமமே இராது..!
ஜானியின் கணிப்பு நூற்றுக்கு நூறு சரியாகி விட்டது. டோரோ அது நங்கூரமிடப்பட்டு நின்ற இடத்திலேயே கடல் படுகையில் அமிழ்ந்து கிடந்தது... கொஞ்சம்கூட சேதமடையாத அந்தக் கப்பலை முழுதாக மீட்டதனால் கிடைத்த லாபம், பத்தாண்டு முயற்சிக்கு ஈடுகட்டி விட்டது...!
விஷயமறிந்த டோனி தன் கம்ப்யூட்டரை வெகுவாகப் பாராட்டினான்...
ஏய்... ஜானி! உனக்கு அபாரமான மூளை...! சாதித்துவிட்டாய்... போ!
இப்படியெல்லாம் என்னை நீ அளவுக்கு மீறி புகழ்ந்தால் ஏற்படு கிற பூரிப்பில் எங்கே யாவது 'ப்யூஸ்' போய்... அச்சச்சோ... நிஜமாகவே கோளாறு...! உய்ங்ங்-


லயன்
காமிக்ஸ்
85
யுத்தம்!
ரூ 3/-